

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், வல்லவாரி ஊராட்சியில் உள்ள ஸ்ரீ மஹாலில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட சிறப்பு முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா, தலைமையில் பொதுமக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர்பாஷா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கோவை காமராஜர் சாலையில் அமைந்துள்ள தியாகி என். ஜி. ராமசாமி நினைவு மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை மாவட்ட அளவிலான கோகோ விளையாட்டுப் போட்டியை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் துவக்கி வைத்தார். இதில் பொதுக்குழு உறுப்பினர் ஆடிட்டர் சசிகுமார், பகுதி பொறுப்பாளர்கள் சிங்கை அன்பு (எ) அன்பழகன் (நீலிகோனாம் பாளையம்), ஏ.எஸ்.நடராஜ் (பீளமேடு), மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால், வட்டக் கழக செயலாளர்கள் கே.ஆனந்தகுமார், ராஜேந்திரன், பகுதி பொருளாளர் சம்பத், பிரதிநிதி திருமுருகன், அவைத்தலைவர் கந்தசாமி, வெங்கடேஷ், ராஜேஷ்குமார், தங்கவேல், சிவக்குமார், ஜம்பு, திருநாவுக்கரசு, ரவிக்கண்ணன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் மனோஜ்குமார், தயாநிதி, முத்துவேல், பட்டேல், சிவக்குமார், பாலசுப்பிரமணியன், ராஜ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சர் வருகை! அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில்

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் மதியழகன் எம்.எல்.ஏ. - ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, செப்.1-

முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை புரிவதையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர்கள் மதியழகன் எம் எல் ஏ,, பிரகாஷ் எம்எல்ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ள அரசு விழாவிற்கு மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணிகளை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு செப்டம்பர் 2025, இரண்டாவது வாரத்தில் வருகைபுரிவதையொட்டி, முன்னேற்பாடு பணிகள் மற்றும் அரசின் முன்னோடி திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ,சட்டமன்ற உறுப்பினர்கள் மதியழகன் (பிரகாஷ், ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு செப்டம்பர் 2025 இரண்டாவது வாரத்தில் வருகை புரிந்து, கிருஷ்ணகிரியில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொண்டு, புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்து, முடிவுற்ற திட்ட பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்கள். மேலும், முதலமைச்சர் அவர்கள் தலைமையில், ஓசூரில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளார்கள்.

அதனடிப்படையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, பள்ளிக்கல்வித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, நீர்வளத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, கூட்டுறவுத் துறை, பொது நூலகத் துறை ஆகிய துறைகளின் வளர்ச்சி திட்ட பணிகள், முடிவுற்ற திட்ட பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், பல்வேறு துறைகள் சார்பாக அரசு

நலத்திட்ட உதவிகள் வழங்க பயனாளிகளின் பெயர் பட்டியல் தயார் செய்து, பயனாளிகளை விழா நடைபெறும் இடத்திற்கு வருகை புரிவதற்கு பேருந்து வசதி, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தருவது குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும், துறை சார்ந்த அலுவலர்கள் தங்கள் துறைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகளை விரைந்து முடிக்க கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

எனவே, அனைத்து துறை அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை எவ்வித தொய்வுமின்றி சிறப்பாக பணி புரிந்து, அரசு விழா நடைபெற முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில், கிருஷ்ண கிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி வளாகத்தில் (சென்னை சாலை) நடைபெறும் அரசு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியொட்டி, விழா மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன்

மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், ஒன்றிய செயலாளர் தனசேகரன், கிருஷ்ணகிரி நகர கழக பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## கரூரில் செப்டம்பர் 17 முப்பெரும் விழா நடத்திட அனுமதி வழங்கிய

# முதல்வர் மு.க.ஸ்டாலின்-துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு நன்றி!

### மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் – செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கரூர், செப்.1-

கழக முப்பெரும் விழாவினை செப்.17ம் தேதி கரூரில் நடத்திட அனுமதி வழங்கிய கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவிப்பது, அவர்களுக்கு கரூர் மாவட்ட திமுக சார்பில் சிறப்பான வரவேற்பு அளிப்பது என மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் கரூர் மாவட்ட கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம்) மாவட்ட கழக அவை தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். செப்.17ம் தேதி கழக முப்பெரும் விழாவை கரூரில் பிரம்மாண்டமாக நடத்துவது குறித்து நிர்வாகிகளின் கருத்துக்களைக் கேட்டு ஆலோசனை நடத்தினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான முப்பெரும் விழாவினை செப்.17ம் தேதி கரூரில் நடத்திட அனுமதி வழங்கி, கரூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டத்தின் வாயிலாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வது.

17.09.2025 அன்று கரூரில் நடைபெறும் திராவிட முன்னேற்ற கழகத்தின் முப்பெரும் விழாவிற்கு வருகை தரும் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், வரவேற்று கரூர் மாவட்ட திமுக சார்பில் சிறப்பாக வரவேற்பு அளிப்பது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

திராவிட கொள்கைகளை உயர்த்திப் பிடித்து, தமிழ்நாட்டின் தனித்தன்மை மற்றும் தமிழர்களின் சுயமரியாதையை பாதுகாக்கும் அரசியல் அரணாக விளங்குகின்ற, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக பொறுப்பேற்று எட்டாம் ஆண்டில் வழிநடத்தி வரும், தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளை உயர்த்திப்பிடித்து, பேறறிஞர் அண்ணா அவர்களின் வழியில், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் கட்டளைகளை கண் போல் காத்து, திராவிட மாடல் அரசின் திட்டங்களை செயல்படுத்தி, தன்னிகரில்லா தலைவராக, எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையை உரு வாக்கிய, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் நன்றியையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்வது.

அனைத்து சேவைகளும் மக்களிடம் நேரடியாக கொண்டு சேர்த்திடும் வகையில், "உங்களுடன் ஸ்டாலின்",வயது முதிர்ந்தோரின் வீட்டிற்கு சென்று நேரடியாக ரேசன் பொருட்களை வழங்கிடும் "தாயுமானவர் திட்டம்", "நலன் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம்கள், நகர்ப்புற மாணவ மாணவியர்களுக்கும் காலை உணவு திட்டம் விரிவாக்கம். மற்றும் மண், மொழி, மானம் காக்க ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு என தமிழ்நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் கழகத் தலைவர், மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, கரூர் மாவட்டத்தில் உள்ள கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராய புரம், குளித்தலை ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதியில் உள்ள மக்கள் உறுதுணையாக யணஇருப்பதை உறுதி செய்திடும் வகையில், 2026 சட்டமன்ற பொது தேர்தலில் மகத்தான வெற்றியை பெற்று, கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களிலும், கழக இளைஞர் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களிலும் வழங்கிட வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது. மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவிராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார்,

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, மாவட்ட பொருளாளர் பி.வி.பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே. சுப்பிரமணி, என்.செல்வராஜ், கழக பொதுக்குழு உறு ப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே. டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ. ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ். காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார்,

கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், பகுதி செயலாளர்கள் க.சுப்பிரமணியன், ஆர்.எஸ்.ராஜா, ஆர்.ஜோதிபாசு, வி.ஜி.எஸ். குமார், வெங்கமேடு பாண்டியன், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.எஸ்.மணியன், என்.மணிகண்டன், கே.கருணாநிதி, த.கார்த்திக், சி.வளர்மதி, வி.கே.வேலுச்சாமி, ப.முத்துக்குமார், எம். ரகுநாதன், கே.பாஸ்கரன், கே.ரவிராஜா, எம்.ராமலிங்கம், கே.வீராசாமி (எ) சுதாகர், சி.கதிரவன், எல்.கரிகாலன், அ.சந்திரன், ப.தியாகராஜன், இ.ராமர் (முன்னாள் எம்எல்ஏ), ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், பேரூர் செயலாளர்கள் க.முரளிராஜா, கா.அம்மையப்பன், சி.தங்கராஜ், எம்.சசிக்குமார், ஆர். மோகன்ராஜ், ம இ.ரவீந்திரன், எம்.முத்து (எ) சுப்பிரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். நாகரத்தினம், பி.காமராஜ், கீதா மணிவண்ணன், எஸ். காமராஜ், ஏ.அறிவழகன். ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

## தமிழச்சி தங்கப்பாண்டியன் தொகுதி மேம்பாட்டு நிதி

# ரூ.80,65,000 மதிப்பீட்டில் மீன் மார்க்கெட்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

சென்னை, செப்.1-

தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட, சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி, மண்டலம் 14, வார்டு 181, கிழக்கு கடற்கரை பிரதான சாலை, கொட்டிவாக்கத்தில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.80,65,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன் மார்க்கெட் கட்டடத்தினை, சென்னை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப் பாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், சென்னை மாநகராட்சி தெற்கு வட்டார துணை ஆணையர் அப்தாப் ரசூல் இ.ஆ.ப, பகுதிச் செயலாளர்கள் மண்டலக்குழுத் தலைவர்கள் மதியழகன், ரவிச்சந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி கல்விக்குழுத் தலைவர் பாலவாக்கம் விஸ்வநாதன், மண்டல 14 அலுவலர் சுரேஷ், மாவட்ட துணை செயலாளர் பாலவாக்கம் மனோகரன், வட்டச் செயலாளர் சாந்தப்பன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அருண்குமார், பார்த்திபன், பரிமேலழகர், கழக நிர்வாகிகள், முன்னணியினர், மாநகராட்சி அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த கொட்டிவாக்கம் கிழக்கு கடற்கரை சாலையில் சாலையோரம் மீன்கள் விற்பனை செய்வதால் பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுவதாகவும், போக்குவரத்து பாதிப்பு ஏற்படுவதாகவும், அப்பகுதி மீனவர்கள் தென்சென்னை எம்.பி தமிழச்சி தங்கபாண்டியனிடம் தெரிவித்து மீன்கள் விற்பனை செய்யும் வகையில் மீன் மார்கெட் கட்டித்தருமாறு கேட்டுக் கொண்டனர்.

அதன்படி, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மீன் மார்கெட் கட்டப்பட்டுள்ளது.

இரண்டு தளங்களில் சுமார் 48 மீனவர்கள் அமர்ந்து மீன் விற்பனை செய்யும் அளவிற்கு இந்த மீன் மார்கெட் கட்டப்பட்டுள்ளது. மீனவர்களுக்கு தேவையான தண்ணீர், கழிவறை வசதியும் அமைக்கப்பட்டுள்ளது.

# கும்மிடிப்பூண்டி - எல்லாபுரம் ஒன்றியத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

### ஊத்துக்கோட்டையில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் ! டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

திருவள்ளூர், செப்.1-

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் பூவலம்பேடு ஊராட்சி பூவலம்பேடு தொடக்கப் பள்ளியில் பூவலம்பேடு, ஜி.ஆர்.கண்டிகை, கொள்ளானூர், பெரியபுலியூர் மற்றும் எல்லாபுரம் ஒன்றியம் மஞ்சங்காரணி ஊராட்சி, சமதாயக் கூடம் பனையஞ்சேரி, ஆமிதாநல்லூர், அக்கரைப்பாக்கம், திருநிலை, மதுரவாசல், மஞ்சங்காரணி மேற்கண்ட இரு ஊராட்சிகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பட்டா மாறுதல் பட்டாவில் பெயர் மற்றும் பரப்பு திருத்தம் சிறு/குறு விவசாயி சான்று முதியோர் உதவித்தொகை விதவைத உதவித்தொகை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் உறுப்பினராக சேர மனுக்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை பராமரிப்பு உதவித் தொகை சுயதொழில் கடனுதவி மனுக்கள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையில் முதலமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் ஆதரவற்ற குழந்தைகளுக்கான நிதி ஆதரவுத் திட்டததின் மனுக்கள் வேளாண்மை உழவர் நலத்துறையில் வேளாண்மை இயந்திரங்கள் கருவிகள் மானியம் மனுக்கள் சிறப்பு திட்ட செயலாக்கத்துறையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை தகுதியுள்ள / விடுபட்ட மகளிர்களின் மனுக்கள் ஆகிய துறையில் பெறப்பட்ட மனுக்களை அந்தந்த துறையில் உள்ள அரசு அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு உடனடியாக பொதுமக்கள் கோரிக்கைளை நாட்களுக்குள் நிறைவேற்றிட வேண்டி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட முன்னாள் மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினரும் கும்மிப்பூண்டி சட்ட மன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் கேட்டு கொண்டார்.



கழக இளைஞரணியின் முன்னாள் துணைச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பொய்யாமொழி அவர்களின் 26வது நினைவு நாளையொட்டி, திருச்சி கிராப்பட்டி அன்பு நகர் இல்லத்தில் திருவுருவப் படத்திற்கு புதுக்கோட்டை தெற்கு மாநகர தி.மு.க. சார்பில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்வில் புதுக்கோட்டை தெற்குமாநகரப் பொறுப்பாளர் வே. ராஜேஷ், மாமன்ற உறுப்பினர் சி.மதியழகன் வட்ட செயலாளர் கண்மணி சுப்பு , இளமுருகன், வீரமணி மற்றும் பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், நத்தக்கடையூர் காங்கேயம் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் மற்றும் சொற்பொழிவாளர் முனைவர் செ.சைலேந்திர பாபு ஆகியோர் கல்லூரி மாணவர்களுக்கு மாபெரும் தமிழ்க் கனவு விழிப்புணர்வு கையேடுகளை வழங்கினார்கள். உடன் கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் நா.செண்பகலெட்சுமி உள்ளார்.